


துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.10.2024) சென்னை பாரிமுனையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு மற்றும் கழக பவள விழா ஆண்டின் நிறைவை முன்னிட்டு, சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் சுமார் 4,250 கழக நிர்வாகிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, தயாநிதிமாறன் எம்.பி. நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.10.2024) வடகிழக்கு பருவமழையின்போது இடைவிடாது பணியாற்றிய குடிநீர், கழிவுநீர் அகற்றும் பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலைய பணியாளர்கள் ஆகியோரை பாராட்டி நன்றி தெரிவித்தார்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை, துறைமுகம் தொகுதியில் நேற்று முன்தினம் (26.10.2024) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு மற்றும் கழக பவள விழா ஆண்டின் நிறைவை முன்னிட்டு, சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் 4,250 கழக நிர்வாகிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கி, பிரியாணியுடன் கூடிய மதிய உணவினை பரிமாறினார். இந்நிகழ்ச்சியில் இந்து சமயம்மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சென்னை, துறைமுகம் தொகுதியில் நேற்று முன்தினம் (26.10.2024) முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு மற்றும் கழக பவள விழா ஆண்டின் நிறைவை முன்னிட்டு, சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் 4,250 கழக நிர்வாகிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இந்து சமயம் மற்றும்அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, தயாநிதிமாறன் எம்.பி. நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (26.10.2024) தலைமைச் செயலகத்தில், வடகிழக்கு பருவமழையையொட்டி தற்போது வரை எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள், வரும் மழைக்காலங்களையொட்டி மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், கூடுதல் தலைமைச் செயலாளர்கள், அரசு செயலாளர்கள் மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.10.2024) புளியந்தோப்பு டான் பாஸ்கோ பாலிடெக்னிக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திரு.வி.க. நகர் மற்றும் வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிகளில் வடகிழக்கு பருவமழை காலங்களில் இடைவிடாது பணியாற்றிய குடிநீர், கழிவு நீர் அகற்றும் பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலைய பணியாளர்கள் 1,446 நபர்களுக்கு அரிசி, துவரம் பருப்பு, எண்ணெய், மிளகாய் தூள், பால் பவுடர், பிஸ்கட் மற்றும் புடவை, கயிலி, போர்வை, ரெயின் கோட் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கி, பிரியாணியுடன் கூடிய மதிய உணவினை பரிமாறி, அவர்களுடன் உணவருந்தினார். இந்நிகழ்ச்சியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ் குமார் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (26.10.2024) புளியந்தோப்பு டான் பாஸ்கோ பாலிடெக்னிக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் திரு.வி.க. நகர் மற்றும் வில்லிவாக்கம் சட்டமன்றத் தொகுதிகளில் வடகிழக்கு பருவமழை காலங்களில் இடைவிடாது பணியாற்றிய குடிநீர், கழிவு நீர் அகற்றும் பணியாளர்கள், தூய்மை பணியாளர்கள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலைய பணியாளர்கள் 1,446 நபர்களுக்கு அரிசி, துவரம் பருப்பு எண்ணெய், மிளகாய் தூள், பால் பவுடர், பிஸ்கட் மற்றும் புடவை, கயிலி, போர்வை, ரெயின் கோட் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ் குமார் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.